DEPOSITION OF WITNESS
CHAPTER ORDER XVIII CODE OF CIVIL PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, AUNDIPATTI
O.S. No. 98/2008

Deposition of Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| Name | : இளங்குமரன் | Father's/Husband's Name : | சுப்பிரமணியன் |
| Village | : கோயம்பேடு | District | : சென்னை |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் B.A., வரை படித்திருக்கிறேன். நான் எந்த அரசு பணியிலும் இல்லை. நான் இந்த வழக்கில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் இடத்தில் 1ம் பிரதிவாதி இடைஞ்சல் செய்வதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். வாதி எனது அக்கா. எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தை ராசுத்தேவர் 03.08.1961ம் ஆண்டு கிரையம் வாங்கியதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ராசுத்தேவர் தாயம்மாள் என்பவரிடம் சர்வே எண்.880ல் 2 ஏக்கர் 77 செண்டும், சர்வே எண்.881ல் 1 ஏக்கர் 57 செண்டும், சர்வே எண்.892ல் 46 செண்ட் நிலம் கிரையம் வாங்கியிருக்கிறார். வாதி கிரையம் வாங்கிய வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் நான் 1வது சாட்சியாக கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். வாதி கிரையம் வாங்கிய தேதியில் நான் தேனியில் தான் குடியிருந்தேன்.

2) பொதுவாக கிரையப் பத்திரம் பதியும் போது சொத்தின் மூல பத்திரம் தேவைப்படும் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக ஆவணங்கள் நீதிமன்றத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். வா.சா.ஆ.1 ஆவணம் எந்த மூல பத்திரத்தின் அடிப்படையில் கிரையம் செய்தார்கள் என்றால் UDR பதிவுகள் மற்றும் நீதிமன்ற உத்தரவின் பேரில் பதிவு செய்துள்ளார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தில் மூல பத்திரத்தின் ஆவண எண்ணாக 4925/1948 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பட்டா எண்ணாக 2908 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் ராசுத்தேவர் 03.08.1961ம்தேதி கிரையம் வாங்கியதாகச் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் வா.சா.ஆ.1

ஆவணத்தில் தாவா சொத்தின் மூல ஆவணத்தின் தேதியாக 22.07.1948 ம் தேதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் 1948 ல் தாயம்மாள் கிரையம் வாங்கினார், 1961 ல் தாயம்மாளிடம் ராசுத்தேவர் கிரையம் வாங்கினார்.

3) என்னிடம் காட்டப்படும் வில்லங்கச் சான்றிதழ் கையால் எழுதப்பட்டுள்ளதால் அதில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. (சாட்சி அந்த ஆவணத்தை ஏற்க மறுப்பதால் குறியீடு செய்யப்படவில்லை). ராசுத்தேவர் பெயரில் தாவா சொத்து எதன் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் UDR ன் போது உட்பிரிவு செய்யப்பட்டது. தாவா சொத்திற்கு ராசுத்தேவர் பெயரில் இருந்த பட்டாவை கடந்த 02.06.1996 ம் தேதி ஆண்டிபட்டி வட்டாட்சியர் ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி பட்டாவின் அடிப்படையில் தான் வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். ராசுத்தேவர் பெயரில் இருந்த UDR பட்டாவை மறைத்து வேறு ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்றதாக சொல்லி வா.சா.ஆ.1 ஆவணம் பதிவு செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி எனது சகோதரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Taken down by me/before me in open court on 16.03.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

E SUGANTHAN
Digitally signed by E SUGANTHAN
Date: 2026.03.16 06:01:37 +0530

District Munsif,
Aundipatti.